ஈழநாடு
Eelanadu ஈழநாடு

விலை ரூ. 30/=

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 11.11.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 315 பக்கங்கள் : 08

## டிசெம்பர் 12 ஆம் திகதி ஆசிரியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 11
நாடாளாவிய ரீதியில் ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கு தீர்வு கோரி டிசம்பர் மாதம் 12ஆம் திகதி ஒரு நாள் அடையாள போராட் டத்தை செய்யவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரி வித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று 07



## அநுராதபுரம் பஸ் விபத்தில் உயர்தர மாணவன் உயிரிழப்பு!

### மேலும் 46 பேர் காயம்



அநுராதபுரம், தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தலாவ - ஜயகங்க சந்தி பகுதியில் பஸ்ஸொன்று விபத்துக் குள்ளானதில் உயர்தர மாணவரொருவர் 07

# சரணடைந்தவர்கள் படுகொலைக்கு சரத் பொன்சேகாவே முக்கிய சாட்சி!

### விசாரணை கோருகிறார் சிறீநேசன் எம்.பி.



கொழும்பு, நவ. 11
முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு சாட்சியமாக மாறி இசைப்பிரியா படுகொலை, வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்கள் படுகொலைகள் தொடர்பில் தொடர்புப்பட டவர்களை வெளிப்படுத்தியிருப்பதால் அவரை ஒரு முக்கிய சாட்சியாகக் கொண்டு இந்த அரசாங்கம் இவ்விடயங்கள் உடனடியாக ஆராய வேண்டும். என தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் வலியுறுத்தினார்.
பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்று கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்-
இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். இது தீர்க்கப்படுவதும் வரவு- செலவுத்திட்டத்திற்கு சாதகமாகவே அமையும். இது தீர்க்கப்பட்டால் 07

## காற்றின் தரம் பாதக நிலையில்!

கொழும்பு, நவ. 11
நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் தற்போது ஆரோக்கியத்துக் குப் பாதகமான அளவுக்கு குறைந்துள்ளதாக, காற்றுத் தரக் குறியீட்டு முறைமையின் நேரடி தரவுகள் தெரிவிக் கின்றன.
இதன்படி 07

## மாகாண சபை தேர்தல் எப்போது நடத்தப்படும்?

### எதிரணி சபையில் கேள்வி

கொழும்பு, நவ. 11
மாகாண சபைத் தேர்தல் எப்போது நடத்தப் படும் என எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா கேள்வி எழுப்பியுள்ளார்.
2026 ஆம் ஆண்டுக் கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான 07


## நல்லிணக்கம், பொறுப்புக்கூறலுக்கு புதிய அரசமைப்பு திருத்தம் அவசியம்

### யாழில் சுவிஸ் தூதரக முதன்மை செயலர்



யாழ்ப்பாணம், நவ. 11
இலங்கையில் நல்லிணக்கத் துக்கும் பொறுப்புக் கூறுதலுக் கும் புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தம் அவசியம் என இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான முதன்மைச் செயலர் ஜஸ்டின் பொய்லட் தெரிவித்தார்.
நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற சட்டத்துக்கும் மனித உரிமைக்கு மான 07

## சட்டவிரோத சொத்து குவிப்பு; யாழ். வர்த்தகரிடம் சோதனை!



யாழ்ப்பாணம், நவ. 11
யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத சொத்து குவிப்பு என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் வர்த்தகர் ஒருவரின் விற்பனை 07

## அர்ஜூன் மகேந்திரனை கைது செய்ய ஏற்பாடு!

கொழும்பு, நவ. 11
2015 ஆம் ஆண்டு மைத்திரி-ரணில் அரசாங்கத்தில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அர்ஜூன் மகேந்திரன், பிணை முறி மோசடி குற்றச்சாட்டில் விரைவில் கைது செய்து இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.
தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள மகேந்திரன், முறைப்படி கைது செய்யப்பட்டு சட்ட நடவக்கை எடுப்பதற்கு உரிய ஏற்பாடு 07

## உயர்தர பரீட்சை நிறைவடைய முன்பே விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்!

கொழும்பு, நவ. 11
இம்முறை உயர்தரப் பரீட்சை நடவடிக்கைகள் நிறைவடைவதற்கு முன்னரே விடைத்தாள் திருத்தும் பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர (க.பொ.த) உயர்தரப் பரீட்சை நேற்று ஆரம்பமான நிலையில், டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
உயர்தரப் பரீட்சை 07

## வீட்டுக் கிணற்றில் தவறி விழுந்து நான்கு வயது சிறுவன் உயிரிழப்பு!

### துன்னாலை வடக்கில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 11
துன்னாலை வடக்கு, கரவெட்டி பகுதியில் வீட்டு கிணற்றில் தவறி விழுந்த நான்கு சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளான்.
இவ்வாறு உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த அருண்நேரு அஸ்வந் என்ற நான்கு வயது சிறுவனாவார்.
நேற்று திங்கட்கிழமை காலை சிறுவன் வீட்டில் தந்தையுடன் இருந்த நிலையில் தந்தை உறக்கத்தால் கண் விழித்தபோது 07

## தென்கொரியாவில் இரு இலங்கையர் நீர்த்தொட்டியில் சடலங்களாக மீட்பு!

கொழும்பு, நவ. 11
தென் கொரியாவில் இரண்டு இலங்கையர்கள் உள்ளிட்ட மூவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.
தெற்கு கியோங்சாங் மாகாணத்தில் உள்ள கோசியோங் கவுண்டியில் இந்த துயரச் சம்பவம் பதிவாகியுள்ளது.
மீன் பண்ணை ஒன்றின் நீர் தொட்டிக்குள் இருந்து சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக தெற்கு கியோங்சாங் பொலிஸ் நிலைய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். 07

## முன்னாள் கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ் ஆலய வளாகத்தில் நேற்று சடலமாக மீட்பு



மன்னார், நவ. 11
வடக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளரும், இலங்கை கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளருமான திருஞானம் ஜோன் குயின்ரஸ் (வயது-60) நேற்று ஆலய வளாகம் ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.
மன்னார்- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள சிப்பியாறு பாம்புவழிகாட்டி 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

## மூவருக்கு 6 மாத கட்டாய சிறை

யாழ்ப்பாணம், நவ. 11

நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களில் 26 மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட 2 வருட சிறைத்தண்டனையும் மேலும் மூவருக்கு 6 மாத கட்டாய சிறைத் தண்டனையும் வழங்கி ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

செப்ரெம்பர் 28 மற்றும் ஒக்ரோபர் 9 ஆம் திகதிகளில் இரு படகுகளுடன் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களின் வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்றது.

இதன்போது சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மீனவர்கள் மன்றுக்கு அழைத்துவரப்பட்டனர். வழக்கை ஆராய்ந்த நீதவான் நளினி சுபாஸ்கரன் 26 மீனவர்களுக்கு 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட 2 வருட சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

அத்துடன் இரு படகுகளின் ஓட்டிகளுக்கும் ஒரு படகு உரிமையாளருக்கும் 6 மாத கட்டாய சிறைத் தண்டனையும் ஒவ்வொருவருக்கும் தலா 4 மில்லியன் ரூபா அபராத தொகையும் செலுத்துமாறும் அதனைச் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 3 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

(அ-05)

# பீடி இலைகளுடன் மூவர் மன்னார் கடலில் கைது!

மன்னார், நவ. 11

மன்னார் ஓலைத்தொடுவாய் கடற்கரைப் பகுதியில் கடந்த 08 ஆம் திகதி இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வர முயன்ற சுமார் 1211 கிலோகிராம் பீடி இலைகள் மற்றும் ஒரு டிங்கி படகுடன் மூன்று சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடல் வழி ஊடாக கடத்தல் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்து தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரைகளை உள்ளடக்கி கடற்படை வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அதன்படி, வடமத்திய கடற்படை கட்டளைக்கு சொந்தமான இலங்கை கடற்படை கப்பல் கஜபா கடந்த 08 ஆம் திகதி இரவு நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, மன்னார் ஓலைதொடுவாய் கடற்கரைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான டிங்கி படகொன்று சோதனை செய்யப்பட்டபோதே மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ)



# அமைதியான முறையில் நேற்று ஆரம்பமான உயர்தரப் பரீட்சை!

யாழ்ப்பாணம், நவ. 11

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நேற்று அமைதியான முறையில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்ளது.

கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை யாழ்.மாவட்டதில் நேற்று காலை ஆரம்பமானது. மாணவர்கள் உற்சாகத்துடன் பரீட்சை நிலையங்களுக்குச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

நாடாளாவிய ரீதியில் இம்முறை 2,362 பரீட்சை மத்திய நிலையங்களில் 340,525 பேர் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

உயர்தரப் பரீட்சை நேற்று முதல் அடுத்த டிசெம்பர் மாதம் 05ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பரீட்சை மத்திய நிலையங்களில் பாதுகாப்புக்காக பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

(அ)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு விழா

கிளிநொச்சி, நவ. 11

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 35ஆவது இளைஞர் விளையாட்டு விழாவின் கிளிநொச்சி மாவட்ட மட்ட விளையாட்டுப்போட்டியின் இறுதிப் போட்டி கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டு கட்டடத் தொகுதி மைதானத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவர் ப.நிலவரசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைஞர் விவகார பிரதி அமைச்சர் தினிந்து சமன் ஹென்னாயக்க கலந்து கொண்டார்.

இதன்போது தடகளப் போட்டியில் மாவட்ட ரீதியில் வெற்றியீட்டியோருக்கு சான்றிதழ்களும் வெற்றி கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

நிகழ்வில் காட்சிப் போட்டியாக யாழ்ப்பாண மாவட்ட அணிக்கும் கிளிநொச்சி மாவட்ட அணிக்குமிடையில் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாண அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன், இளைஞர் சேவைகள் மன்ற தலைவர் சட்டத்தரணி சுபுன் விஜேரத்ன, இளைஞர் சேவை மன்ற அதிகாரிகள், இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர்.

(அ)

# மூச்செடுக்க சிரமப்பட்ட இளம் பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 11

யாழில் மூச்செடுக்க சிரமப்பட்ட பெண் உயிரிழந்துள்ளார்.

இருபாலை, கோப்பாய் கிழக்கு என்ற முகவரியை சேர்ந்த 24 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் நேற்று முன் தினம் அதிகாலை 2.00 மணியளவில் மூச்செடுப்பதற்கு சிரமப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நோயாளர் காவு வண்டிக்கு தகவல் வழங்கப்பட்டது. நோயாளர் காவு வண்டியில் அங்கு வந்தவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்து திரும்பிச் சென்றனர்.

பின்னர் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(அ)









# கோப்பாய் பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடந்த இலக்கிய விழா!

யாழ்ப்பாணம், நவ. 11

கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையில் கோப்பாய் பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய இலக்கிய விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கோப்பாய் பிரதேச செயலாளரும் கலாசார அதிகார சபையின் தலைவருமான ஈ.தயாரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. கிருஸ்ணகுமார் பங்கேற்றார்.

இவ்விழாவில் கதை கூறல், நாட்டார் பாடல், கவியரங்கம் உள்ளிட்ட பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

நுண்கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாழ்கையில் நீர்வையூர் பொன் சக்தி கலா கேந்திரா மாணவர்கள் வழங்கிய நாட்டிய அர்ப்பணம் மற்றும் மயில் நடனம் பார்வையாளர்களை கவர்ந்தன.

நிகழ்வின் இறுதியில் தேசிய பிரதேச இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவினருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அதேவேளை கோப்பாய் பிரதேச செயலகம் நடத்திய முதல் இலக்கிய விழா இதுவென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(அ)

## மாநகர சபை, யாழ்ப்பாணம்

## ஆதனவரி மீள் மதிப்பீடு தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாணம், மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள சகல ஆதனங்களையும் மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கை 12.11.2025ம் திகதி முதல் அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே இவ் எல்லைக்குள் வதியும் ஆதனங்களின் உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள் அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக சமூகமளிக்கும் பொழுது தங்கள் ஆதனத்ததிற்கரிய ஆவணங்களை பார்வைக்கு சமர்ப்பிக்குமாறும், தங்களது ஆதனத்திற்குள் நுழைந்து ஆதனங்களினை பார்வையிட்டு மீள் மதிப்பீடு மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

1947ம் ஆண்டின் 29ம் இலக்க மாநகர சபைகள் சட்டம் பிரிவு 230இன் பிரகாரம் மீள் மதிப்பீட்டாளர் தங்கள் ஆதனங்களுக்குள் பிரவேசிக்கவும், ஆதனங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலிக்கவும், ஆதன மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் உரித்துடையவர்கள் என்பதோடு உரிய ஆதன விபரங்களை அவர்களிற்கு வழங்கி தங்களது ஆதனங்களின் பதிவினை / உரித்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

10.11.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார இதழ்
ஈழநாடு
Eelanadu
11.11.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தொல்பொருள் ஆணைக்குழு விவகாரம்?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நியமித்திருக்கும் தொல்பொருள் ஆணைக்குழுவில் சிறுபான்மையினத்தை பிரதிநித்துவப்படுத்தும் நிபுணர்கள் நியமிக்கப்படவில்லை என்னும் குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது. கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலும் இவ்வாறானதொரு குற்றச்சாட்டு எழுந்தது. கோட்டாபய ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் அவரிடம் தெளிவான சிங்கள-பௌத்த நிகழ்ச்சிநிரல் இருந்தது.

அந்த அடிப்படையில்தான் அவ்வாறன தீர்மானங்களை எடுத்திருந்தார். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமோ அனைத்து மக்களையும் சமமாக நடத்தும் கொள்கை பற்றி பேசிவருகின்றது. இந்தப் பின்னணியில் தொல்பொருள் ஆணைக்குழுவில் எதற்காக ஏனைய சமூகத்தை பிரதிநித்துவம் செய்பவர்கள் உள்வாங்கப்படவில்லை என்னும் கேள்வி எழுவது இயல்பான ஒன்றே!

கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த ஆணைக்குழுவிலும் தேரர்கள் பிரதான இடத்தை பெற்றிருந்தனர். தற்போது தேசிய மக்கள் சக்தி நியமித்திருக்கும் ஆணைக்குழுவின் தலைவராக தேரர் ஒருவரே நியமிக்கப்பட்டிருக்கின்றார். தொல்பொருள் விவகாரத்தில் எப்போதுமே பௌத்த மத மேலாதிக்கம் ஒன்று பேணிப்பாதுக்காக்கப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தியும் அதனையே தொடர முற்படுகின்றது என்பதையே மேற்படி நியமனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி என்னதான் அரசியல் மாற்றங்கள் தொடர்பில் பேசினாலும் கூட, பௌத்த மதத்திற்கு முன்னுரிமையளிக்கும் விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்களின் கொள்கை நிலைப்பாட்டுடன்தான் இருக்கின்றனரா ?

அடுத்த விடயம், தொல்பொருள் ஆணைக்குழுவிற்கு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் உள்வாங்கப்படவில்லை என்னும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் போது, சரி நாங்கள் ஒருவரையோ அல்லது இருவரையோ நியமிக்கின்றோம் என்னும் நிலைப்பாட்டை அரசாங்கம் கைக்கொள்ளக் கூடும். ஆனால் இவ்வாறான அணுகுமுறையானது அடிப்படையான மாற்றங்களோடு தொடர்புபட்டது அல்ல. மாறாக, ஒரு வேண்டுகோளின் அடிப்படையில் அல்லது விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் அணுகுமுறையாகவே அமையும். இவ்வாறான நியமனங்கள் பரிதாப அடிப்படையிலான நியமனங்களாகவே இருக்க முடியும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவரப் போவதாக கூறிவரும் நிலையில், தொல்பொருள் ஆணைக்குழு விடயத்தில் அவர்களது அணுகுமுறையானது, குறித்த அரசியல் யாப்பு எவ்வாறு ஒரு வேளை கொண்டுவரப்பட்டால் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை ஊகிக்க முடிகின்றது. கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலும் இதுதான் நடந்தது. தற்போது புதிய அரசியல்யாப்பு வருகின்ற போது மாகாண சபை முறைமை இல்லாமலாக்கப்படும் என்று ரில்வின் சில்வா கூறிவருகின்ற நிலையில், ஜே.வி.பி விரும்புகின்ற அரசியல் யாப்பும் பௌத்தத்திற்கு மேலும் முன்னுரிமையளிக்கும் வகையிலேயே அமைந்திருக்கும் என்றுதானே ஊகிக்க முடியும்.

தொல்பொருள் ஆணைக்குழு விவகாரமானது, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல், ஜே.வி.பி என்னதான் மாற்றங்கள் தொடர்பில் பேசினாலும் அவர்கள் அடிப்படையில் நம்பியிருப்பது தென்னிலங்கையின் சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் கட்டமைப்பைத்தானா என்னும் கேள்வியே மேலேழுகின்றது.

# அனைத்து வாகனங்களுக்கும் இனி வீதித் தகுதிச் சான்றிதழ்!

கொழும்பு, நவ. 11

எதிர்காலத்தில் அனைத்து வாகனங்களும் 'வீதித் தகுதிச் சான்றிதழ்' கொண்டிருப்பது கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் இந்த விடயத்தை தெளிவுபடுத்தியுள்ளார்.

இது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் என்றும், உலகின் வளர்ந்த நாடுகளில் இது கட்டாயச் சான்றிதழாகும் என்றும், இந்தச் சான்றிதழ் இல்லாத வாகனங்கள் வீதியில் செல்ல அனுமதிக்கப்படாது என்றும் அவர் கூறினார்.

வணிக வாகனங்களுக்கு தற்போது தேவைப்படும் 'உடற்தகுதிச் சான்றிதழ்' அனைத்து வாகனங்களுக்கும் கட்டாயமாக்கப்படும்.

தற்போது அனைத்து வாகனங்களுக்கும் தேவைப்படும் உமிழ்வுச் (புகைச்) சான்றிதழுடன் உடற்தகுதிச் சான்றிதழை இணைத்து இந்த 'வீதி தகுதிச் சான்றிதழ்' ஒரே இடத்திலிருந்து வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இது மிகவும் சிக்கலான மற்றும் விரிவான திட்டம் என்பதாலும், கவனமாக ஆராய வேண்டிய பணி என்பதாலும், அடுத்த ஆண்டு முதல் அதன் ஆரம்பப் பணிகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"புகை சான்றிதழ்கள்" வழங்குவதற்கான தற்போதைய முறைமை 2027 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நடைமுறையில் இருப்பதால், புதிய முறை இன்னும் இரண்டு ஆண்டுகளில், அதாவது 2028 முதல் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# பல்கலை மாணவியின் உறுப்புகள் தானம்!

கொழும்பு, நவ. 11

எதிர்பாராத விதமாக உயிரிழந்த கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழ கத்தின் மாணவி ஒருவரின், சிறுநீரகம் உட்பட வேறு ஒருவருக்குப் பொருத்தக்கூடிய உறுப்புகள் தானம் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார விஞ்ஞான பீடத்தில் தாதியியல் மற்றும் குடும்ப நலப் பட்டப் படிப்பை பயின்று வந்த மூன்றாம் வருட மாணவி ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தநிலையில், பெற்றோரின் தீர்மானத்துக்கமைய, அவரது உறுப்புகள் அகற்றப்பட்ட பின்னர், மாணவியின் பிரேத பரிசோதனை கண்டி தேசிய மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பிரேத பரிசோதனையின்போது, முதுகெலும்பு சுருக்கத்தால் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு மரணம் நிகழ்ந்துள்ளது என்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கைகள் மற்றும் சாட்சியங்களைக் கருத்தில் கொண்ட கண்டி தேசிய மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி சந்திரவன்ஸ வரகாவுல்ல, இது முதுகெலும்பு சுருக்கத்தின் சிக்கல்களால் மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவு காரணமாக ஏற்பட்ட திடீர் மரணம் என்று தீர்மானித் தார்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திலிருந்து கடந்த 5 ஆம் திகதி தனது வீட்டுக்கு வந்திருந்த இந்த மாணவி, 6 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில், தனது வீட்டில் உள்ள குளியலறையில் விழுந்த நிலையில் மீட்கப் பட்டார்.

பின்னர் கண்டி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்தார். (அ)

# உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவி திடீரென்று உயிரிழந்தார்!

கொழும்பு, நவ. 11

கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் உயிரியல் பரீட்சைக்கு தோற்றவிருந்த 19 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் தம்புள்ளையில் இடம்பெற்றுள்ளது.


நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தனது அறையில் படித்துக்கொண்டிருந்த மாணவி, காலை தூக்கத்திலிருந்து எழுந்திருக்காததை அவதானித்த பெற்றோர், மயக்க நிலையில் இருந்த மாணவியை தம்புள்ளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு மாணவியை பரிசோதித்த வைத்தியரிகள், மாணவி ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, மாணவியின் மரணம் தொடர்பாக கண்டறிவதற்கு, மாணவியின் வீட்டுக்குப் பொலிஸார் சென்றுள்ளனர்.

இந்நிலையில், மாணவியின் மரணத்துக்கான காரணத்தை கண்டறிய முடியவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**

குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**மிதுனம்**

குடும்பத்தாரின் ஆத்ரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**கடகம்**

குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். மாற்றம் உண்டாகும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். முன்னேறும் நாள்.

**கன்னி**

பழைய பிரச்னைகளைத் தீர்ப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக்கொள்ளுவீர்

**துலாம்**

கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**விருச்சிகம்**

உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் நிம்மதி உண்டாகும்.

**தனுசு**

சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**

குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**கும்பம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**மீனம்**

எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள்.

# குப்பிழான் சந்தியில் குழு மோதல் ஐவர் மருத்துவமனையில் அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 11

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குப்பிழான் சந்தியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குழு மோதலில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர். இவ்வாறு, காயமடைந்த ஐவரும் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

இரண்டு குழுவினருக்கு இடையே குப்பிழான் சந்தியில் மோதல் ஏற்பட்டது. இந்த நிலையில் ஒரு குழுவைச் சேர்ந்த ஒருவரும் மற்றைய குழுவினரை சேர்ந்த மூவரும் சமாதானப்படுத்த சென்ற ஓட்டோ சாரதியுமென ஐவர் இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்தனர்.

குறித்த குழுவினர் மதுபோதையில் மோதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர். (எ-05)

# வடக்கு- கிழக்கில் பனை அபிவிருத்திக்கு 300 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

## பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு

திருகோணமலை, நவ. 11

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பனை அபிவிருத்திக்காக 300 மில்லியன் ரூபாய் நிதியை வரவு- செலவு திட்டத்தின் மூலம் அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் நேற்று முன்தினம் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், பனை சார் உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தியவர்களுக்கு பிரதி அமைச்சரால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதோடு, திருகோணமலை, உப்புவெளி பிரதேசத்தில் “கற்பகம்” என்ற பெயரில் பனை சார் உற்பத்திப் பொருட்களின் விற்பனை நிலையம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், பெறுமதி வாய்ந்த பனை உற்பத்தி பொருட்களுக்கான உபகரணங்களும் பிரதி அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில், திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ந. மதிவண்ணன், பிரதி அமைச்சர்களின் செயலாளர்கள், பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

# எல்லை தாண்டி மீன்பிடித்த 14 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 11

பருத்தித்துறை கடற்பரப்பில் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த 14 இந்திய மீனவர்களை நேற்றுக்காலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கைதான மீனவர்கள் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (எ)

# பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய கடும் மழை

கொழும்பு, நவ. 11

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பிறகு மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா, தென், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசும். மின்னல் தாக்கத்தால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (எ)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 11

தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 31 எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடை பெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப்புலவர் த. மனோஜ்குமார் “மாமனாக வந்து வழக்கூரைந்த படலம்” என்னும் தலைப்பில் சொற்பொ ழிவு நிகழ்த்தவுள்ளார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# வவுனியாவில் 2455 மாணவர்கள் பரீட்சை எழுதினர்

வவுனியா, நவ. 11

நாடளாவிய ரீதியில் க. பொ. த. உயர்தர பரீட்சை நேற்றுக் காலை ஆரம்பித்தது.

இதில், வவுனியா மாவட்டத்தில் 20 பரீட்சை நிலையங்களில் 2455 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர். இவர்களில் 1865 மாணவர்கள் முதல் தடவையாக பாடசாலைகளூடாகவும் 590 பேர் தனிப்பட்ட பரீட்சாத்திகளாகவும் பரீட்சையில் தோற்றுகின்றனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனையாளருக்கு மறுவாழ்வு அளிக்க அரசு நடவடிக்கை!

## ஆலோசகர்களை நியமிக்க ஏற்பாடு

கொழும்பு, நவ. 11

**போதைப்பொருட்களுக்கு அடிமையான இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன், அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்க ஆலோசகர்களை நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

போதைப்பொருள் விநியோகத்தை கட்டுப்படுத்துவது குறித்து இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதற்காக சுமார் 300 ஆலோசகர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்த மறுவாழ்வுத் திட்டத்திற்காகத் தொண்டர் சேவையாளர்களைக் கொண்ட ஆலோசகர்கள் பயன்படுத்தப்பட உள்ளனர்.


தற்போது 750 பேர்களைக் கொண்ட ஆலோசகர்களின் தொண்டர் சேவைக் குழு ஒன்று இதற்கு தயாராக உள்ளது.

இவர்களில் சுமார் 300 பேர் தேவைப்படும் நேரங்களில் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக ஆலோசனை வழங்க ஈடுபடுத்தப்படுவார்கள்.

இவ்வாறு ஈடுபடுத்தப்படும் நபர்களுக்குச் சில சலுகைகள் அல்லது கொடுப்பனவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்

போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர்களில் ஒரு பகுதியினருக்கு மறுவாழ்வு அளிக்கப்படும்.

மற்றவர்கள் அவர்களின் நிலையைப் பொறுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவார்கள்.



மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் இளைஞர்களின் பெற்றோர்களையும் அழைத்து, ஆலோசகர்களுடன் கலந்துரையாடிய பின்னரே மறுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும்-என்றார்.

(அ)

# பட்ஜெட்டை பாராட்டும் ஆடைத் தொழில்துறை

கொழும்பு, நவ. 11

இலங்கையின் மிகப்பெரிய தொழில்துறை ஏற்றுமதி வருமான ஆதாரமான ஆடைத் தொழில்துறை, 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தைப் பாராட்டியுள்ளது.

குறித்த துறையானது, ஏற்றுமதி பலத்தையும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சரியான திசையில் எடுக்கப்பட்ட ஒரு படியாக இதைக் கருதுகிறது. எவ்வாறாயினும், அரசாங்கத்தால் பின்பற்றப்படும் கொள்கைகளின் நிலையான அமுலாக்கத்திலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது என்று குறித்த துறையினர் வலியுறுத்துகின்றனர்.

ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி, முதலீட்டு வசதி மற்றும் பெரிய பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் இலங்கையின் இலங்கையின் வெளிநாட்டுக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான தெளிவான போக்கைப் பாதீடு வெளிப்படுத்துகின்றது என ஒருங்கிணைந்த ஆடை சங்கங்களின் பேரவை கூறியுள்ளது.

ஆனால், இந்தக் கொள்கைகள் எவ்வளவு திறம்பட அமுல்படுத்தப்பட்டு பேணப்படுகின்றன என்பதைப் பொறுத்தே அதன் நீண்ட கால தாக்கம் தீர்மானிக்கப்படும் என் றும் ஒருங்கிணைந்த ஆடை சங்கங்களின் பேரவை வலியுறுத்துகிறது.

உலகளாவிய ரீதியில் நிலையற்ற சூழலில் ஏற்றுமதியாளர்கள் செயற்படும் இத்தருணத்தில், இந்த நடவடிக்கை போட்டித் தன்மையை அதிகரிக்கவும் தேவையான வெளிநாட்டு முதலீட்டைக் ஈர்க்கவும் உதவும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

மேலும் 2026ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டம் ஒரு வலுவான ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான நோக்கத்தைக் காட்டினாலும், கொள்கை அமுலாக்கத்தின் ஸ்திரத்தன்மையும் தெளிவுமே இறுதியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் காரணியாகும் என்று ஒருங்கிணைந்த ஆடை சங்கங்களின் பேரவையின் பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

(அ)

# இலங்கையின் 16 ஆவது தேசிய சைபர் பாதுகாப்பு மாநாடு நாளை கொழும்பில்

கொழும்பு, நவ. 11

“நம்பகமான மற்றும் சைபர் மீள்தன்மை கொண்ட தேசத்தை உருவாக்குதல்” என்ற கருப்பொருளில், இலங்கையின் 16வது தேசிய சைபர் பாதுகாப்பு மாநாடு நாளை புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் உட்பட 400 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய இந்த நிகழ்வில் அநுர குமார திஸாநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த தேசிய நிகழ்வை டிஜிற்றல் பொருளாதார அமைச்சு மற்றும் இலங்கை இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. இது கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வல்லுநர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அரசு, தனியார்துறை, பெருநிறுவன அமைப்புகள்,அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளை ஒன்றிணைக்கிறது.

அதிகரித்து வரும் சைபர் அச்சுறுத்தல்களின் சகாப்தத்தில் சைபர் தயார்நிலை, டிஜிற்றல் நம்பிக்கை மற்றும் தேசிய மீள்தன்மையை மேம்படுத்துவதற்கான நாட்டின் மூலோபாய திசையை பிரதிபலிக்கும் “கொள்கையை வடிவமைத்தல், நடைமுறையை செயல்படுத்துதல் மற்றும் தேசிய மறுமொழி திறனை வலுப்படுத்துதல்” என்ற துணை கருப்பொருளை மையமாகக் கொண்டுள்ளது.

(அ)

# மருத்துவர்களை விட விலங்குகளுக்கே இம்முறை பட்ஜெட்டில் சாதகம் அதிகம்!



## வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ

கொழும்பு, நவ. 11

026ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தை விசேட வைத்திய நிபுணரான சமல் சஞ்சீவ கடுமையாக விமர்சித்துள்ளார்.

குறித்த பாதீட்டில் விலங்கு நலனுக்குக் கணிசமான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டின் வைத்திய நிபுணர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

“பாதீட்டுத் திட்டத்தில், நாய்கள் உள்ளிட்ட விலங்குகளின் நலனுக்காகப் பெரிய அளவிலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இளம் வைத்தியர்கள் மற்றும் நிபுணர்களை நாட்டில் தக்கவைத்துக் கொள்ளவோ அல்லது அவர்களை ஊக்குவிப்பதற்கோ எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை,” என வைத்தியர் சஞ்சீவ கூறினார்.

அத்துடன் இலங்கையின் முதன்மை சுகாதார சேவைகளைச் சர்வதேச மட்டத்தில் பேணுவதற்காக, கிராமப்புற மருத்துவமனைகள் முதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரை ஆயிரக்கணக்கான சுகாதார வல்லுநர்கள் இரவும் பகலும் அயராது உழைத்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால், இம்முறை அவர்களின் நலனுக்காக எந்தவித விசேட கவனமும் செலுத்தப்படாமை வருந்தத்தக்கது என அவர் தெரிவித்தார்.

மேலும் நாட்டிலிருந்து வெளியேறும் மருத்துவர்களைத் தக்க வைத்துக்கொள்ள, இலவச வாகன உரிமங்கள் போன்ற சலுகைகளை வழங்குவது உதவும் என்றும் வைத்தியர் சஞ்சீவ கூறினார்.

(அ)

# போதைப்பொருள் படகு தொடர்பில் விசாரிக்க மாலைதீவுக்குச் சென்ற இலங்கை விசேட குழு!

கொழும்பு, நவ. 11

மாலைதீவு பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளை ஏற்றிச் சென்ற கப்பல் மற்றும் அதிலிருந்த மீனவர்கள் 6 பேர் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக பாதுகாப்புப் பிரிவின் விசேட குழு ஒன்று மாலைதீவுக்கு சென்றுள்ளது.

சுமார் 300 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் பயணித்த மீன்பிடிக் கப்பல் ஒன்று மாலைதீவு பாதுகாப்புப் படையினரால் அண்மையில் கைப்பற்றப்பட்டது.

பாகிஸ்தானில் இருந்து கடத்திவரப்பட்ட போதைப்பொருளை ஏற்றிச் சென்ற கப்பல், மாலைதீவு பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

இலங்கை வழங்கிய புலனாய்வுத் தகவலின் அடிப்படையில், மாலைதீவு கடற்படை சர்வதேச கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான கப்பலை கைப்பற்றியது.

இந்த நிலையில் மாலைதீவு பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் கடத்தல் கப்பல் மற்றும் மீனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் மற்றும் கடற்படை அதிகாரிகள் அடங்கிய குழு மாலைதீவுக்குச் சென்றுள்ளது.

குறித்த கப்பல் தற்போது மாலைதீவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களில் ஒருவரான தெஹிபாலேவின் திட்டமிடலில் குறித்த போதைப்பொருள் தெற்கு கடற்கரை மார்க்கத்தில் நாட்டுக்குள் தரையிறக்க திட்டமிடப்பட்டிருந்தமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. (அ)

# இராணுவ பயிற்சி ஆரம்பம்

கொழும்பு, நவ. 11

இந்தியாவும் இலங்கையும் மித்ரா சக்தி என்ற இராணுவப் பயிற்சியை நேற்று ஆரம்பித்துள்ளன.

இந்த பயிற்சிகள் எதிர்வரும் 23ஆம் திகதிவரை கர்நாடகாவின் பெலகாவி என்ற இடத்தில் நடத்தப்படவுள்ளதாக இந்திய பாதுகாப்பு இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

11ஆவது வருடமாக இந்த பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உட்பட்ட பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் இந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னதாக இரண்டு நாட்டுப் படையினருக்கு இடையிலான 10ஆவது வருடப் பயிற்சிகள் இலங்கையின் மாதுருஓயாவில் நடத்தப்பட்டன. (அ)

# போதைப்பொருள் குறித்து தகவல் வழங்கும் 1818 என்ற இலக்கத்துக்கு 800 முறைப்பாடுகள்

கொழும்பு, நவ. 11

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகத் தகவல் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 1818 தொலைபேசி இலக்கத்துக்கு 800 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இந்த 800 முறைப்பாடுகளும் கடந்த 4 நாட்களுக்குள் கிடைத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற, விஷப் போதைப்பொருள் ஒழிப்புக்கான “முழு நாடுமே ஒன்றாக” தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கொழும்பு மாவட்டச் செயற்பாட்டுத் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன. 1818 அவசர அழைப்பு இலக்கத்தை அறிமுகப்படுத்தியதன் பின்னர், 4 நாட்களுக்குள் சுமார் 800 தொலைபேசி அழைப்புகள் கிடைத்துள்ளன.

அவை சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் இருந்து அதிகளவான தகவல்கள் வருகின்றன.

அதேபோல், இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட முதல் 4 நாட்களில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 5,300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கொழும்பு மாவட்டத்தில் போதைப்பொருள் பரவல் அதிகளவில் உள்ளதைக் காண முடிந்தது-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளை, பண்டாரவளையில் போதைப்பொருள் விற்பனை

## பெண்கள் உட்பட மூவர் சிக்கினர்

பதுளை, நவ. 11

அளுத்கம பிரதேசத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட ஹெரோயினை பதுளை மற்றும் பண்டாரவளை பிரதேசங்களில் விற்பனை செய்யும் கடத்தல் வலையமைப்பைக் கண்டறிந்து, அது தொடர்பில் இரண்டு பெண்கள் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொதி செய்யப்பட்ட ஆயிரம் ஹெரோயின் பைக்கெற்றுக்களுடன் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹாலி - எல பிரதேசத்தை சேர்ந்த 28 மற்றும் 30 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள் பதுளை மற்றும் பண்டாரவளை பிரதேசங்களுக்கு போதைப்பொருட்களை விநியோகிப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரிகள் அந்த வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

அப்போது போதைப்பொருளைப் பொதி செய்து கொண்டிருந்த இரண்டு சந்தேகநபர்களையும் கைது செய்து மேற்கொண்ட விசாரணைகளில், அளுத்கமவிலிருந்து வரும் ஒருவரே அவர்களுக்கு ஹெரோயினை வழங்குவது தெரியவந்தது.

அவரைப் பிடிப்பதற்காக பண்டாரவளைப் பொலிஸார் ஒரு தந்திரோபாயத்தைப் பயன்படுத்தினர்.

இதன்படி, குறித்த நபரை பண்டாரவளை தோவ ரஜமகா விகாரைக்கு வருமாறு அந்தப் பெண்கள் மூலம் தகவல் அனுப்பப்பட்டது.

இதற்கமைய, அவர் வெள்ளை உடையில் போதைப்பொருட்களுடன் விகாரைக்கு வந்துள்ளார்.

அவர் பெண் ஒருவருக்குப் போதைப்பொருளை வழங்க முற்பட்டபோது, சிவில் உடையில் இருந்த பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். (எ)




# பண்ணிசை போட்டியில் காரைதீவு அறநெறி மாணவர்கள் முதலிடம்

காரைதீவு, நவ. 11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய இவ்வாண்டுக்கான அறநெறி மாணவர்களுக்கான தேசிய மட்ட பண்ணிசைப் போட்டியில் அம்பாறை மாவட்டம், காரைதீவு கண்ணகி அறநெறி பாடசாலை மாணவர்கள் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இப் போட்டி கொழும்பு கலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தை எதிர்த்து போட்டியிட்ட காரைதீவு அணி முதலிடத்தை பெற்றுக்கொண்டது. (எ-08)



# நிந்தவூர் கலாசார மண்டபத்தின் புனர்நிர்மாணத்துக்கு நிதி ஒதுக்கீடு

நிந்தவூர், நவ. 11

2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் ஊடாக அம்பாறை மாவட்டம், நிந்தவூரில் உள்ள கலாசார மண்டபத்தை புனர்நிர்மாணம் செய்து அதனைப் பூர்த்தி செய்வதற்கு 300 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா முன்வைத்த வேண்டுகோளுக்கு அமைய இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (எ)

# மாநகர கலாசார மண்டபம் ஆளுநரால் திறந்து வைப்பு



கல்முனை, நவ. 11

உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் 65 மில்லியன் ரூபாய் நிதியில் அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபையால் மருதமுனை- பெரிய நீலாவணையில் அமைக்கப்பட்ட மாநகர கலாசார மண்டபத் திறப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம். றாபி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர பிரதம விருந்தினராக கலந்து கொண்டு, கலாசார மண்டபத்தை திறந்து வைத்தார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம் பாவா, கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஜே. லியாகத் அலி, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். அஸ்மி, கல்முனை மாநகர சபையின் கணக்காளர் எஸ். மனாசிர் அஹ்சன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் எம். பைஷல், கிழக்கு மாகாண சபையின் கணக்காளர் முஹம்மட் சாலின், ஓய்வுபெற்ற நீதிபதி எம். மனாப், கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# மட்டக்களப்பில் போலி சட்டத்தரணி கைது!

மட்டக்களப்பு, நவ. 11

மட்டக்களப்பு, நீதிமன்றத்துக்குள் சட்டத்தரணிகள் அணியும் ஆடை போல அணிந்து உள்நுழைந்து வழக்காடி தருவதாக பொதுமக்கள் பலரிடம் பல இலட்சம் ரூபாயை மோசடி செய்ததுடன் சில சட்டத்தரணிகளையும் ஏமாற்றி நாடகமாடி வந்த போலி சட்டத்தரணி ஒருவரை ஓந்தாச்சி மடத்தில் வைத்து கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் சட்டத்தரணிகள், பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள பிரதேசம் ஒன்றைச் சேர்ந்த பெண் ஒருவர் வீட்டில் தங்க ஆபரணங்கள் திருட்டுப் போன சம்பவம் தொடர்பாக மீட்கப்பட்ட தங்க ஆபரணங்களை நீதிமன்றிலிருந்து மீளப் பெறுவது தொடர்பில் மட்டக்களப்பு நீதிமன்றில் இடம் பெற்றுவரும் வழக்கு விசாரணைக்கு வழக்காடுவதற்கு நல்ல சட்டத்தரணி ஒருவரை தேடிய நிலையில் அவருக்கு அறிமுகமான ஒருவர் நல்ல சட்டத்தரணி ஒருவர் இருப்பதாக போலி சட்டத்தரணியின் தொலைபேசி இலக்கத்தை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண் அந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்ட நிலையில் போலி சட்டத்தரணி தான், அந்த தங்க ஆபரணங்களை மீட்டுத் தருவதாகவும் இதனை மிக விரைவாக மீட்பதற்கு நீதிமன்றத்தில் சிலருக்கு பணம் வழங்க வேண்டும். வழக்கு தொகையாக 2 இலட்சம் ரூபாய் கோரியுள்ளார்.

அதற்கு குறித்த பெண் சம்மதித்து அவருக்கு முற்பணமாக ஓர் இலட்சம் ரூபாயை வழங்கி, அடுத்து சில தினங்களின் பின்னர் கடந்த ஒக்ரோபர் மாதம் வழக்குக்கு நீதிமன்றத்துக்கு வருமாறு கடிதம் வந்துள்ளது. இந்த நிலையில் போலி சட்டத்தரணி தான் முன்நகர்வு பத்திரம் தாக்கல் செய்ததை அடுத்து வழக்குக்கு வருமாறு அழைப்பு கடிதம் வந்துள்ளதாக குறித்த பெண்ணிடம் தெரிவித்துள்ளார்.

அப்போது குறித்த பெண் நவம்பர் மாதம் திகதியிடப்பட்ட வழக்கை முன்கூட்டியே பணம் வழங்கி 3 தினங்களில் நீதிமன்றத்துக்கு வருமாறு அழைப்பு கிடைத்துள்ளது. அவர் நல்ல சட்டத்தரணி என எண்ணிக் கொண்டார்.

இதனையடுத்து அங்குள்ள சட்டத்தரணி ஒருவருடன் தொடர்பு கொண்டு தான் கொழும்பு உயர் நீதிமன்ற சட்டத்தரணி என அறிமுகப்படுத்தி கொண்டு எனக்கு கல்முனை திருகோணமலை போன்ற உயர் நீதிமன்றங்களில் வழக்கு இருப்பதாகவும் தனது வாடிக்கையாளர் ஒருவரின் குறித்த வழக்கை எடுத்து நடத்துமாறு கோரியதை அடுத்து அந்த சட்டத்தரணி அந்த வாடிக்கையாளரை என்னை சந்திக்க அனுப்புமாறு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த வழக்கு தொடர்பாக மட்டக்களப்பு நீதிமன்றத்தில் உள்ள குறித்த சட்டத்தரணியை பெண் சந்தித்து வழக்கு தொடர்பாக தெரிவித்ததையடுத்து 3 வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி வந்துள்ளார்.

இந்த நிலையில் வழக்கு விசாரணைக்காக குறித்த பெண் மற்றும் போலி சட்டத்தரணி சென்றுள்ள நிலையில் ஏற்கனவே வழக்குக்கு ஆஜராகிய சட்டத்தரணிக்கு இந்த போலி சட்டத்தரணி தொடர்பில் சந்தேகம் எழுந்ததையடுத்து அவரை அங்கிருந்து பதிவாளர் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்று இவர் சட்டத்தரணியா? என உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளார்.

அதனையடுத்து நீதிமன்ற பதிவாளர் போலி சட்டத்தரணியிடம் அடையாள அட்டையை கோரியபோது அவர் தனது வாகனத்தில் இருக்கிறது எடுத்து கொண்டு வருவதாக தெரிவித்து அங்கிருந்து சட்டத்தரணிகள் வாகனம் நிறுத்தும் பகுதிக்கு சென்று தனது வாகனத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து போலி சட்டத்தரணி தொடர்பில் நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து குறித்த போலி சட்டத்தரணியை கடந்த சனிக்கிழமை இரவு ஓந்தாச்சி மடத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்தனர்.

# ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்து தொழிலாளர்கள் கொண்டாட்டம்

நுவரெலியா, நவ. 11

அக்கரைப்பத்தனை நியுபிரஸ்டன் தோட்டத் தொழிலாளர்கள் 2026 வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் தங்களுக்கு 1,750 ரூபாய் சம்பள அதிகரிப்பை அறிவித்த ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்து நேற்று முன்தினம் விசேட நிகழ்வொன்றை ஏற்பாடு செய்தனர்.

பல ஆண்டுகளாக சம்பள உயர்வுக்காகப் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்தியும் அது பயனளிக்காத நிலையில் ஜனாதிபதி, வரவு- செலவுத் திட்டத்தில் 200 ரூபாய் சம்பளம் வழங்கப்படும் எனத் தெரிவித்ததோடு, இறுதியாக 1,750 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுமென அறிவித்தமை தொழிலாளர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக, தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் தோட்டத்தில் உள்ள கொழுந்து நிறுவை செய்யும் இடத்தில் ஒன்றுகூடி தேங்காய் உடைத்து, கற்பூரம் கொளுத்தி, பாற் சோறு வழங்கி தங்கள் நன்றியையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர். (எ)

# உயிரிழந்த நிலையில் காட்டு யானை மீட்பு!

மாத்தளை, நவ. 11

மாத்தளை, இரத்தோட்டை- வேரகம காட்டுப்பகுதியில் உயிரிழந்த நிலையில் காட்டு யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக இரத்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

15 வயது மதிக்கத்தக்க யானை ஒன்றே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த யானை நீண்ட நாட்களாக வேரகம பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் பயிர்களை சேதப்படுத்தி வந்ததாக பிரதேசவாசிகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

யானை உயிரிழந்தமை தொடர்பில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிசெம்பர்...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இடமாற்றம் சம்பந்தமாக ஆசிரியர்களுக்கோ அதிபர்களுக்கோ நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் என்ன? கல்வி அதிகாரிகள் தான் இந்த பிரச்னையை தீர்க்கவேண்டும். இடமாற்றம் காரணமாக பல பிரச்னைகள் இருந்தன. ஆசிரியர்கள் பல போராட்டங்களை மேற்கொண்டார்கள். ஒரு போராட்டம் தொடர்பிலும் ஆளுநர் தனது கவனத்தை செலுத்தவில்லை. மாகாண சபை இல்லை. இங்கு ஆளுநரின் வழிநடத்தலில் நிர்வாகம் நடைபெறு கிறது.

ஆளுநரின் அலுவலகம் முன்பாக போராட்டம் நடைபெற்ற போதும்கூட ஆசிரியர்களுக்கு எந்த பதிலும் சொல்லாமல் ஆளுநர் பின் கதவால் தப்பிச் சென்றார்.

எங்கள் உரிமைகளுக்காக யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்திற்கு நாங்கள் வந்திருக்கிறோம்.

வடக்கு மாகாண கல்வி சம்பந்தமாக பல பிரச்னைகள் உருவாகி இருக்கின்றன. இதற்கு ஒரு தீர்வு வழங்க வேண்டும் ஜனநாயக ரீதியாக இங்கு செயல்பாடுகளை காணவில்லை. ஆளுநர் என்.பி.பி. அரசின் பிரதிநிதியாக செயல்படுகிறார். ஆளுநர் பதவி என்பது என்.பி.பி அரசுக்கு சொந்தமான பதவி அல்ல. அது பொதுவான பதவி. இந்தப் பிரச்னைகளை கண்டித்து டிசெம்பர் 12ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நாடளாவிய ரீதியில் இந்த போராட்டம் செய்யப்படவுள்ளது-என்றார். (அ)

## சரணடைந்தவர்கள்...

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்தது.தற்போது 16 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை கையில் எடுக்கவேண்டுமென சொல்லப்பட்டது.

அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது இந்த இறுதி யுத்தத்தில் மனித பேரவலம் இடம்பெற்றது. மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன. இதற்கு அரசு பொறுப்பு கூறவேண்டும். உண்மைகளைக் கண்டறிய வேண்டும். பரிகார நீதி வழங்க வேண்டும். மீண்டும் இவ்வாறான அவலங்கள் ஏற்படாது தடுக்க வேண்டும் என்ற கருத்துக்கள் சொல்லப்பட்டன . ஆனால் இன்னும் அந்த விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை.

நாட்டின் பொருளாதாரத்தோடு இந்த பிரச்னைக்கு நெருக்கமான தொடர்பிருக்கின்றது. வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள், காணி அபகரிப்புக்கள் தொடர்பாகவும் பேச வேண்டியிருக்கின்றது.

கடந்த காலங்களில் பாலியல் பலாத்காரங்கள், பாலியல் வன்கொடுமைகள் நடைபெற்றிருந்தன. மத்திய முகாம் என்ற இடத்தில் கோணேஸ்வரி என்ற தாய் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

அதேபோன்று சாரதாம்பாள் புங்குடுதீவில் கொலை செய்யப்பட்டிருந்தார். கிருஷாந்தி செம்மணியில் கொலை செய்யப்பட்டிருந்தார். இசைப்பிரியா என்ற விடுதலைப் புலிகளின் ஊடகவியலாளர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த இடத்தில் இது தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு முக்கிய விடயத்தை சொல்லியுள்ளார். அவர் தானாக முன்வந்து சில ஒப்புதல் வாக்கு மூலங்களை ஊடகங்களுக்கு சொல்லி வருகின்றார்.

அந்த வாக்கு மூலங்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது இசைப்பிரியா படுமோசமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கு காரணமாக இருந்தவர் புலனாய்வு பணிப்பாளர் கபில ஹெந்தவிதாரண என்பவர் என சரத் பொன்சேகா சொல்லியுள்ளார். அத்தோடு ஜகத் ஜயசூரிய என்பவரைப் பற்றியும் சொல்லியுள்ளார்.

யுத்தத்துக்கு தலைமைதாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு சாட்சியமாக இந்த விடயங்களை ஒப்புக்கொண்டுள்ளார். வெள்ளைக்கொடியுடன் வந்தவர்கள் கூட படு கொலை செய்யப்பட்டுளார்கள் இதற்கு காரணமானவர் சவேந்திர சில்வா என்றும் சொல்லியுள்ளார்.

இவ்வாறான நிலையில் உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பில் இந்த அரசாங்கம் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது. இந்த நிலையில்தான் யுத்தத்துக்கு தலைமை தாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவம் செய்ய குற்றங்கள் தொடர்பில் வாக்குமூலம் கொடுத்துள்ளார். எனவே இந்த விடயம் ஆராயப்படவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு போர்க்குற்ற சாட்சியங்கள் தானாகவே கிடைத்துள்ளன. எனவே இவற்றை இந்த அரசு கையாளவேண்டும் .தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை இந்த அரசு துரிதமாக கையாள வேண்டும்-என்றார். (அ)

## அனுராதபுரம்...

பலியாகியுள்ளார். மேலும் 46 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 36 பேர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. மேலும் 10 பேர் தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

தலாவயில் இருந்து பயணித்த பயணிகள் போக்குவரத்து பஸ்ஸே வீதியை விட்டு விலகி, பள்ளத்தில் வீழ்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் உட்பட சுமார் 60 பேர்வரை பஸ்ஸில் பயணித்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

## நல்லிணக்கம்...

கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற "அரசியல் தீர்வும் பொறப்புக் கூறலும் ஒரு எண்ணிம ஆவண காப்பக அறிமுகம்" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் நல்லிணக்கமும் ஸ்த்திரத்தன்மை ஏற்பாடுவதற்கு அரசியல் யாப்பு சீர்திருத்தம் அவசியமாக என்ற நிலையில் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு நல்லிணக்கத்துக்கு வலுச்சேர்க்கும்.

இனங்களுக்கு இடையில் ஏற்படுகின்ற நல்லிணக்கம் அமைதி மற்றும் வன்முறை ஏற்ற சூழலை உருவாக்குவதோடு நாட்டின் அரசியல் ஸ்த்திரத்தன்மையை பலப்படுத்தும். ஆகவே இனங்களுக்கு இடையில் கடந்த காலங்க ளில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் இனியும் ஏற்படா மல் இருக்க நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவதற்கு புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தம் அவசியம் என நம்புகிறேன் -என்றார். (அ)

## அர்ஜுன்...

செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சென்ற ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு தாக்கல் செய்த முறைப்பாட்டில், செப்ரெம்பர் 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

ஆனாலும் அர்ஜுன் மகேந்திரன் இதுவரை முன்னிலையாகவில்லை. இதனால் அவரை உடனடியாக கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. சர்வதேச பிடியாணையின் பிரகாரம் அவரை கைது செய்ய குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(அ)

## காற்றின்...

கதுருவெல, சிலாபம், அகரகம, வந்துரகல, திகன, மடம்பகம, ஹங்கம, அக்கரைப்பற்று, கலவான, முள்ளியவளை,பன்னங்கண்டி மற்றும் உப்புவெளி ஆகிய இடங்களுடன், யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பின் பல பகுதிகளும் அடங்கும். காற்றிலுள்ள மாசு அளவு நீண்ட நேரம் சுவாசிப்ப தற்கு ஆபத்தான அளவை எட்டியுள்ளது. இது சிறுவர், முதியோர், மற்றும் சுவாச அல்லது இதய நோய்கள் உள்ளவர்களுக்கு மிகவும் ஆபத்தானது என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இதனால் குறித்த பகுதிகளில் வசிப்பவர்கள் வெளியில் செல்லும்போது முகக்கவசத்தை அணியுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## மாகாணசபை...

விவாத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆகையால், இப்போது நாங்கள் கேட்கிறோம் மாகாண சபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும்? மாகாண சபைத் தேர்தல் பற்றி பேசும்போது, அவர்கள் இப்போது சட்டமில்லை என்று கூறுகிறார்கள். சட்டம் இல்லையெனில், இந்த நாட்டின் மக்கள் உங்களுக்கு இரண்டு-மூன்றாம் பெரும்பான்மையைக் கொடுத்திருக்கிறார்கள் சட்டம் கொண்டு வருவதற்காக. அதனால் எந்த பிரச்னையும் இல்லை. ஆகையால், சட்டமில்லை என்று பொய்யாகக் கூறி ஒரு வருடம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் உண்மை யில் இந்த தேர்தலை நடத்த விரும்பினால், 159 பேரின் இரண்டு-மூன்றாம் பெரும்பான்மை உங்களிடம் உள்ளது, தேவையான சட்டத்தை கொண்டுவர முடியும். அதற்குக் கூட அதிக நேரம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

ஆனால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அரசியல் விருப்பம் உங்களிடம் இல்லை என்பது தெளிவாகின்றது-என்றார். (அ)

## உயர்தர...

நடவடிக்கைகள் நேற்று வெற்றிகரமாக ஆரம்பமான நிலையில், இது தொடர்பாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த நேரத்தில் பரீட்சை ஆரம்பமானதுடன் நாட்டிலுள்ள அனைத்துப் பரீட்சை நிலையங்களிலும் எவ்விதத் தடங்கலும் இன்றிப் பரீட்சை வழமைபோல நடைபெற்றது எனவும் அவர் கூறினார்.

பரீட்சை முடிவதற்கு முன்னரே விடைத்தாள் திருத்தும் பணிகளை ஆரம்பிக்க தற்போது நாங்கள் திட்டங்களைத் தயாரித்துள்ளோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## சட்டவிரோத...

நிலையத்தில் நேற்று சோதனை நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்தி பகுதியில் உள்ள வாகன விற்பனை நிலையமொன்றிலேயே பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் பெற்றுக்கொள்ளப்பட்ட தேடுதல் அனுமதிக்கமைய குறித்த சோதனை நடத்தப்பட்டது.

சட்டவிரோதமாகச் சொத்துச் சேர்த்த சிலருக்கு எதிராக, யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வழக்கு பதிவு செய்துள்ளனர். இதனடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில் ஒருவரின் கையடக்க தொலைபேசிக்கு இன்னொருவரிடம் இருந்து கைத்துப்பாக்கியின் புகைப்படம் அனுப்பப்பட்டிருந்தமை பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனொரு கட்டமாக குறித்த நபரின் விற்பனை நிலையத்தில் சோதனை நடத்தப்பட்டதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## வீட்டுக்...

சிறுவனை காணாது தேடினார். கிணற்றுக்குள் சிறுவன் காணப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணை மேற்கொண்டார். நெல்லியடி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கபட்டது. (அ)

## தென்கொரியாவில்...

20 மற்றும் 30 வயது டைய இலங்கையர்க ளும் 50 வயதான கொரிய மேற்பார்வையாளர் ஒருவர் என மூவர் சடல மாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8:30 மணியளவில் இளம் மீன் இனப்பெருக்கப் பிரிவுகளுக்கு தண்ணீர் வழங்கப் பயன்படுத்தப்படும் பெரிய நீர்த்தேக்க தொட்டியில் இருந்து சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தியது.

நான்கு மீற்றர் அகலம், மூன்று மீற்றர் நீளம் மற்றும் இரண்டு மீற்றர் ஆழம் கொண்ட தொட்டி தண்ணீரால் நிரப்பப்பட்டிருந்தது . குறுகிய திறப்பு மற்றும் ஏணி வழியாக மட்டுமே இந்த நீர் தொட்டியை அணுகக் கூடியதாக இருந்தது.

மேற்பார்வையாளரின் குடும்பத்தினர் இரவு 7:38 மணிக்கு அவர் காணாமற்போனதாக முறைப்பாடு செய்ததை தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அதிகாரிகள் அந்த இடத்தில் ஆய்வு செய்தனர்.

இலங்கைத் தொழிலாளர்களில் ஒருவர் பணிச் சீருடையில் இருந்ததாகவும், மற்ற இருவரும் வழக்கமான உடையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவம் குறித்து அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தொழில்துறை விபத்துக்கான சாத்தியத்தை அதிகாரிகள் நிராகரிக்கவில்லை, மேலும் மரணத்திற்கான சரியான காரணத்தைக் கண்டறிய பிரேத பரிசோதனை திட்டமிடப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்தபோது பாதிக்கப்பட்டவர்கள் தொட்டியை சுத்தம் செய்ய முயன்றார்களா அல்லது வேறு பணியில் ஈடுபட்டிருந்தார்களா என்பதை புலனாய்வாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர். (அ)

## முன்னாள்...

அந்தோனியார் ஆலய வளாகத்தில் இருந்தே அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று திங்கட்கிழமை தனது வாகனத்தில் பாம்பு வழிகாட்டி அந்தோனியார் ஆலயத்துக்கு வருகை தந்து வழிபாட்டில் ஈடுபட்ட நிலையில் அவர் உயிரிழந்திருக்கலாம் என தெரிய வருகின்றது.

சடலத்தை கண்ட ஆலய நிர்வாகத்தினர் இலுப்பைக்கடவை பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தை பார்வையிட்டனர். பின்னர் மேலதிக நடவடிக்கைகளுக்காக சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இந்தியாவிலுள்ள 50 அகதிகள் இலங்கைக்கு திரும்ப ஆர்வம்!

## அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தகவல்

சென்னை, நவ. 11

**இந்தியாவிலுள்ள இலங்கை ஏதிலிகள் தன்னார்வ அடிப்படையில் நாடு திரும்பும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகம் தெரிவித்துள்ளது.**

இந்த ஆண்டு சுமார் 50 பேர் இலங்கை திரும்ப ஆர்வம் காட்டியுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

இது தொடர்பில் கொழும்புடன் இணைந்து செயல்பட்டு வருவதாக, இந்தியாவில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் தலைவர் அரெட்டி சியென்னி, தெரிவித்துள்ளார்.


முன்னதாக, தன்னார்வ அடிப்படையில் இலங்கைக்கு திரும்பிய நான்கு தமிழர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியாவிலிருந்து அகதிகள் தாயகம் திரும்பும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன.

கடந்த ஆண்டு 200 இலங்கை அகதிகள் தங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பியதாகவும், இந்த ஆண்டு சுமார் 50 பேர் ஆர்வம் காட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குடியுரிமை, நாடு திரும்புதல் அல்லது மீள்குடியேற்றம் மூலம் ஏதிலிகளுக்கு நீடித்த தீர்வுகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக இந்திய அதிகாரிகளுடன் தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் தற்போது 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள் தங்கியுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர்



பல தசாப்தங்களாக தமிழ்நாட்டில் வசித்து வருகின்றனர்.

அதில், 2002 முதல் 18 ஆயிரத்து 643 அகதிகள் தன்னார்வ நாடு திரும்பும் திட்டத்தின் கீழ் இலங்கைக்குத் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜே.வி.பி. செயலாளர் விரைவில் டில்லிக்கு!

கொழும்பு, நவ. 11

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

ரில்வின் சில்வா அண்மையில் மூன்று வாரங்கள் பயணம் மேற்கொண்டு சீனா சென்றிருந்தார். அங்கு முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தி இருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இந்தியா செல்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதுடில்லி விஜயத்தின்போது அந்தநாட்டு அதிகாரிகளுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவின் அதிகாரபூர்வ அழைப்பின் பேரில் அவர் செல்கின்றாரா அல்லது கட்சியொன்றின் அழைப்பின் பிரகாரம் செல்கின்றாரா என்பது பற்றி இன்னும் தகவல் வெளியாகவில்லை. எனினும், இலங்கைக்கான இந்திய தூதுவர், ரில்வின் சில்வாவை அண்மையில் சந்தித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு-கிழக்கில் மோசடிகள் தீவிரம்!

## எச்சரிக்கும் பொலிஸார்

கொழும்பு, நவ. 11

இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி நடத்தப்படும் நிதி மோசடிகள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இணையத்தளங்கள் மூலமாக நடைபெறும் மோசடி நடவடிக்கைகள், குறிப்பாக ரெலிகிராம், வட்ஸ் அப் போன்ற கணக்குகள் மற்றும் ஏனைய சமூக ஊடக குழுக்களைப் பயன்படுத்தி நடத்தப்படும் நிதி மோசடிகள் குறித்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் பதிவாகி வருகின்றன.

இதுபோன்ற சம்பவங்களில், மோசடியாளர்கள் பொது மக்களை ஏமாற்றி அவர்களது வங்கிக்கணக்கு இலக்கங்கள், கடவுச்சொல் மற்றும் கியூ.ஆர். குறியீடுகள் போன்ற இரகசிய தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

பின்னர் நிகழ்நிலை வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி பல்வேறு கணக்குகளுக்குப் பணம் செலுத்தும்படி ஊக்குவித்து நிதி மோசடிகளில் ஈடுபடுவதாக அறியமுடிகின்றது.

அண்மைக் காலமாகக் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகவும் உயர்கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தித்தருவதாகவும் கூறி, பாரிய அளவிலான நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இந்தநிலையில், இணையத்தளத்தைப் பயன்படுத்தும் போது இத்தகைய மோசடிகள் தொடர்பாக எச்சரிக்கையாக செயல்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# நுவரெலியா மாவட்டத்தில் மட்டுமே சிவில் பாதுகாப்பு அதிகாரி இல்லை

கொழும்பு, நவ. 11

நாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரமே எந்தவொரு சிவில் பாதுகாப்பு சேவை அதிகாரியும் சேவையில் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

அத்துடன், அநுராதபுரம் மாவட்டத்தில் மாத்திரம் 7 ஆயிரத்துக்கு மேற்பட்ட அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால வெளியிட்ட தகவல்களுக்கு அமைய இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் விவாதத்துக்கான பாராளுமன்ற அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 56, முல்லைத்தீவில் 1,394 வவுனியாவில் 997, கிளிநொச்சியில் 1858 அநுராபுரத்தில் 7100, பொலனறுவையில் 2,772, மொனராகலையில் 2,812 சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

பதுளையில் 350 அம்பாந்தோட்டையில் 473 காலியில் 87 மாத்தறையில் 116 அம்பாறையில் 5077 மட்டக்களப்பில் 269 திருகோணமலையில் 4193 கொழும்பில் 825 கம்பஹாவில் 518 களுத்துறையில் 423 சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

அதேபோன்று, கண்டியில் 703 மாத்தளையில் 114, குருநாகலில் 245 புத்தளத்தில் 638 இரத்தினபுரியில் 293 கேகாலையில் 109 அதிகாரிகளுமாக மொத்தமாக 31,422 சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் சேவையில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

எனினும், நுவரெலியா மாவட்டத்தில் எந்தவொரு சிவில் பாதுகாப்பு சேவை அதிகாரியும் இல்லை என்று அமைச்சர் ஆனந்த விஜேபால இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

# டிஜிற்றல் மயமாகப்போகும் இலங்கை சுகாதார சேவை!

கொழும்பு, நவ. 11

இலங்கையின் இலவச சுகாதார சேவையை டிஜிற்றல் முறையில் மாற்றுவதற்காக சுகாதார மற்றும் பொது ஊடக அமைச்சு வழிகாட்டுதல் குழுவொன்றை ஸ்தாபித்து வருகிறது.

அடுத்த 10 ஆண்டுகளுக்கான தேசிய சுகாதாரக் கொள்கைக்கு அமைய டிஜிற்றல் மயமாக்கலுக்கான ஒரு மூலோபாய கட்டமைப்பை உருவாக்குவது குறித்து சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள், உட்கட்டமைப்பு மேம்பாடு, சர்வதேச திட்டங்கள், மனிதவள அபிவிருத்தி ஆகியவை முக்கியமாகப் பரிசீலிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் பிரதி அமைச்சர்களான ஹன்சக விஜேமுனி, எரங்க வீரரத்ன மற்றும் ஜனாதிபதியின் டிஜிற்றல் பொருளாதாரத்துக்கான சிரேஷ்ட ஆலோசகர் ஹன்ஸ் விஜேசூரிய ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஆபாசமான இணையத்தளங்களை வருவாய்க்காக நாடும் இலங்கையர்!

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 11

வெளிநாடுகளில் செயற்படும் பல வயது வந்தோருக்கான இணையத்தளங்கள் மற்றும் செயலிகள் பணச் சலுகைகளை வழங்குவதால், அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்கள் இணையவழி பாலியல் உள்ளடக்க தயாரிப்பை நாடுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இளம் தம்பதியினர், தங்கள் அடையாளங்கள் மறைக்கப்பட்டு, இத்தகைய நடவடிக்கைகளை வீட்டிலிருந்தே இரகசியமாக மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் ஈர்க்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இணையத்தில் பாலியல் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பது, தயாரிப்பது அல்லது விநியோகிப்பது இலங்கையில் சட்டவிரோதமானது என்றும், சம்பந்தப்பட்ட நபர்கள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

முன்னதாக இத்தகைய சம்பவம் தொடர்பில் திருமணமான தம்பதியினர் இருவர் நுகேகொடை பிரிவுக்குரிய சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினால் கைது செய்யப்பட்டனர்.

கணவர் ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியல் பட்டதாரி என்றும், மனைவி மற்றொரு தனியார் நிறுவனத்தில் மனோதத்துவவியலில் டிப்ளோமா பட்டம் பெற்றவர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# நீதவான் பதவிக்கான ஆட்சேர்ப்பு தகுதிகளைத் திருத்த தீர்மானம்!

கொழும்பு, நவ. 11

நீதிச் சேவையின் நீதவான் பதவிக்கான ஆட்சேர்ப்பு தகுதிகளைத் திருத்துவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நீதிச் சேவையின் இரண்டாம் தரத்தின் முதல் தர நீதவான் பதவிக்கான தகுதிகளே இவ்வாறு திருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த பதவிக்கு நிறைவேற்றப்படவேண்டிய 4 தகுதிகளை நீதிச் சேவை ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

3 வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு செயற்பாட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபட்டிருக்கும் சட்டத்தரணியாக இருத்தல், சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் செய்து 3 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்டுள்ள, உயர்நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம் அல்லது சட்ட ஆராய்ச்சி அதிகாரியாகப் பணியாற்றிய சட்டத்தரணியாக இருத்தல் ஆகியவை குறித்த தகுதிகள் ஆகும்.

அத்துடன் ஏதேனும் அமைச்சு, திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் அல்லது பிற அரச நிறுவனமொன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்குச் சட்ட அதிகாரியாகப் பணியாற்றிய மற்றும் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றங்களில் ஆஜரான சட்டத்தரணியாக இருத்தலும் குறித்த தகுதிகளில் அடங்கும்.

ஏதேனும் நிறுவனம், வங்கி அல்லது நிறுவனத்தில் 3 வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்குச் சட்ட அதிகாரியாகப் பணியாற்றிய மற்றும் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றங்களில் ஆஜரான சட்டத்தரணியாக இருத்தலும் நீதிச் சேவை இரண்டாம் தரத்தின் முதலாம் தர நீதவான் பதவிக்கான தகுதியாகும் என நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org